# 6 தீராத விளையாட்டுப் பிள்ளை

**பாடலை ஆசிரியர் இசையோடு பாடும்போது செவிமடுப்போம், குழுநிலையிலும், தனித்தனியாகவும் பாடலைப் பாடுவோம்.**



தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை.

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்.

தேனொத்த பண்டங்கள் கொண்டு - என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழும் நேரத்தி லேகிள்ளி விடுவான்.

அழகுள்ள மலர்கொண்டு வந்தே - என்னை
அழ அழச் செய்துபின், ''கண்ணை மூடிக்கொள்
குழலிலே சூட்டுவேன்'' என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.



- பாரதியார்-



## சந்தி பிரித்து உரத்து வாசித்துப் பழகுங்கள்

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக்கு  ஓயாத தொல்லை.

தின்னப் பழம் கொண்டு தருவான் - பாதி
        தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என் அப்பன் என் ஐயன் என்றால் - அதனை
        எச்சில் படுத்திக் கடித்துக் கொடுப்பான்.

தேன் ஒத்த பண்டங்கள் கொண்டு - என்ன
        செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மான் ஒத்த பெண்ணடி என்பான் - சற்று
        மனம் மகிழும் நேரத்திலே கிள்ளி விடுவான்.

அழகு உள்ள மலர்கொண்டு வந்தே - என்னை
        அழ அழச் செய்துபின், ''கண்ணை மூடிக்கொள்
குழலிலே சூட்டுவேன்'' என்பான் - என்னைக்
        குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| தீராத | - | නිමාවක් නැති/නොසන්සිඳෙන |
| ஓயாத | - | නිමාවක් නැති |
| தட்டிப் பறிப்பான் | - | උදුරා ගනී |
| எச்சிற்படுத்தி | - | ඉඳුල් කර |
| தேன் ஒத்த | - | මී පැණි වගේ රසවත් |
| பண்டங்கள் | - | කෑම වර්ග |
| எட்டாத | - | අල්ලන්න බැරි |
| மான் ஒத்த | - | මුවෙකු බඳු |
| மனம் மகிழும் | - | සිත සතුටු වන |
| கிள்ளி | - | කොනිත්තා |
| குழலிலே | - | බටනලාවේ |
| சூட்டுவேன் | - | මලක් පළඳමි |
| குருடாக்கி | - | අන්ධ කොට |

## செயற்பாடு - 01

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் குறிப்பிடுங்கள்.**

1. கண்ணன் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை. ( )
2. கண்ணன் தெருவிலே ஆண்களுக்கு ஓயாத தொல்லை கொடுப்பான். ( )
3. கண்ணன் தின்னப் பழம் கொண்டு தருவான். ( )
4. கண்ணன் பழங்களைத் தட்டிப் பறிக்க மாட்டான். ( )
5. என்னப்பன் என்னையன் என்றால் பழத்தை எச்சிற்படுத்தி திருப்பிக் கொடுப்பான். ( )

## செயற்பாடு - 02

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. தீராத விளையாட்டுப் பிள்ளை யார்?
2. கண்ணன் ஓயாமல் தொல்லைக் கொடுப்பது யாருக்கு?
3. தின்பதற்கு கண்ணன் கொண்டுவந்து தருவது என்ன?
4. பாதி தின்கின்றபோது, கண்ணன் செய்யும் குறும்பு யாது?
5. பெண்கள் கண்ணனிடம் எவ்வாறு கெஞ்சுவார்கள்?
6. மானொத்த பெண் என வர்ணித்து யாது செய்வான்?
7. அழகுள்ள எவற்றைக் கொண்டு வருவான்?
8. அழகுள்ள மலரினை யாருக்கு வைப்பான்?

## செயற்பாடு - 03

1. இப்பாடலை அபிநயத்துடன் பாடுங்கள்.

## செயற்பாடு - 04

1. இப்பாடலில் கண்ணன் செய்யும் குறும்புகளைப் பட்டியற்படுத்துங்கள்.
2. கண்ணனின் குறும்புகளில் உமக்குப் பிடித்த குறும்பு யாது? ஏன்?

**நிறந்தீட்டப்பட்டுள்ள சொற்களை அவதானியுங்கள். அவை கண்ணன் செய்யும் குறும்புகளை எதிர்காலத்தில் காட்டுகின்றன.**

1. கண்ணன் மலரினைத் தோழிக்கு **வைப்பான்.**
2. கண்ணன் தின்கின்ற போதிலே தட்டிப் **பறிப்பான்.**
3. கண்ணன் எச்சிற்படுத்திக் கடித்துக் **கொடுப்பான்.**
4. கண்ணன் மனமகிழும் நேரத்திலே **கிள்ளி விடுவான்.**
5. கண்ணன் குழலிலே **சூட்டுவான்.**
6. கண்ணன் தின்னப் பழம் கொண்டு **தருவான்.**

**1. கண்ணன் (அவன்) வைப்பான், பறிப்பான், கொடுப்பான்.**

**2. கண்ணன் (அவன்) கிள்ளிவிடுவான், சூட்டுவான், தருவான்.**

## செயற்பாடு - 05

**பின்வரும் அட்டவணையை முழுமைப்படுத்துங்கள்.**

| | படி | சிரி | ஆடு | விளையாடு |
|---|---|---|---|---|
| அவன் | படிப்பான் | ................ | ................ | ................ |
| அவள் | ................ | ................ | ஆடுவாள் | ................ |

**முதல் நிரலை அவதானியுங்கள், அதைப் பின்பற்றி மற்றைய நிரல்களை முழுமைப்படுத்துங்கள்.**

**எதிர்காலம்**

| | சிரி | கதை | உடை | நட | திற |
|---|---|---|---|---|---|
| நான் | சிரிப்பேன் | ________ | ________ | ________ | ________ |
| நாங்கள் | சிரிப்போம் | ________ | ________ | ________ | ________ |
| நீ | சிரிப்பாய் | ________ | ________ | ________ | ________ |
| நீங்கள் | சிரிப்பீர்கள் | ________ | ________ | ________ | ________ |
| அவர் | சிரிப்பார் | ________ | ________ | ________ | ________ |
| அவன் | சிரிப்பான் | ________ | ________ | ________ | ________ |
| அவள் | சிரிப்பாள் | ________ | ________ | ________ | ________ |
| அவர்கள் | சிரிப்பார்கள் | ________ | ________ | ________ | ________ |
| அது / அவை | சிரிக்கும் | ________ | ________ | ________ | ________ |

**முதல் நிரலை அவதானியுங்கள் அதைப் பின்பற்றி மற்றைய நிரல்களை முழுமைப்படுத்துங்கள்.**

| | ஆடு | பாடு | சாப்பிடு | விளையாடு | அனுப்பு |
|---|---|---|---|---|---|
| நான் | ஆடுவேன் | ______ | ______ | ______ | ______ |
| நாங்கள் | ஆடுவோம் | ______ | ______ | ______ | ______ |
| நீ | ஆடுவாய் | ______ | ______ | ______ | ______ |
| நீங்கள் | ஆடுவீர்கள் | ______ | ______ | ______ | ______ |
| அவர் | ஆடுவார் | ______ | ______ | ______ | ______ |
| அவன் | ஆடுவான் | ______ | ______ | ______ | ______ |
| அவள் | ஆடுவாள் | ______ | ______ | ______ | ______ |
| அவர்கள் | ஆடுவார்கள் | ______ | ______ | ______ | ______ |
| அது, அவை | ஆடும் | ______ | ______ | ______ | ______ |

**பின்வரும் இடைவெளியை நிரப்புங்கள்.**

1. நான் (சிரி) ______________________
2. அது (குடி) ______________________
3. அவர்கள் (அனுப்பு) ______________________
4. அவை (சாப்பிடு) ______________________
5. அவர் (வாங்கு) ______________________

## செயற்பாடு - 06

**தீராத விளையாட்டுப் பிள்ளை போன்ற வேறு பாடல்களை இசையோடு பாடுங்கள். மாதிரிப் பாடல்.**

### அம்மா என் தெய்வம்



அம்மா, அம்மா வருவாயே
அன்பாய் முத்தம் தருவாயே
அம்மா உன்னைக் கண்டாலே,
அழுகை ஓடிப் போய்விடுமே.

பத்து மாதம் சுமந்தாயே
பாரில் என்னைப் பெற்றாயே.
பத்தி யங்கள் காத்தாயே
பாடு பட்டு வளர்த்தாயே.

அழகு மிக்க சந்திரனை
ஆகாயத்தில் காண்பித்தே,
பழமும், பாலும் ஊட்டிடுவாய்.
பாட்டும் கதையும் கூறிடுவாய்.



தமிழைக் கற்றுத் தந்திடுவாய்.
　　தத்துப் பித் தெனப் பேசிடினும்,
அமுதம் அமுதம் என்றிடுவாய்.
　　அணைத்து முத்தம் தந்திடுவாய்.

எனக்குச் சிறுநோய் வந்தாலும்,
　　ஏனோ மிக்க வருந்துகிறாய்?
உணவும் இன்றி, உறங்காது,
　　உயிர்போல் என்னைக் காக்கின்றாய்.

உன்னைப் போலே வளர்த்திடுவோர்,
　　உலகில் உண்டோ, வேறொருவர்?
என்னைக் காக்கும் அம்மாவே,
　　எனக்குத் தெய்வம் நீதானே.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| தெய்வம் | - දෙවියෝ |
| முத்தம் | - හාදුව |
| பார் | - ලෝකය |
| சந்திரன் | - හඳ |
| ஆகாயம் | - අහස |
| வேறொருவர் | - වෙනත් අයෙක් |

## செயற்பாடு - 07

1. அன்பாக முத்தம் தருபவர் யார்?
2. அம்மா எதனைக் காட்டிப் பாலும், பழமும் ஊட்டுவார்?
3. ''தத்துப் பித்''தெனப் பேசும்போது, அம்மா என்ன கூறுவார்?
4. நோய் வந்தால் அம்மா என்ன செய்வார்?
5. இப்பாடலில் உமக்குப் பிடித்த இரண்டு அடிகளை எழுதுங்கள்.

## செயற்பாடு - 8

**பின்வரும் சொற்களுக்குச் சமமான கருத்தைத் தரும் சொல்லைத் தெரிந்து எழுதுங்கள்.**

**(சாப்பாடு, கடவுள், பிணி, உலகம், வானம்)**

1. பார் -
2. ஆகாயம் -
3. உணவு -
4. தெய்வம் -
5. நோய் -